

திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி திருக்கழுக்குன்றத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் மகாத்மா காந்தி பெயர் நீக்கம் உள்ளிட்ட ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்கை கண்டித்து ஒன்றிய செயலாளர் தமிழ்மணி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் வரவேற்புரையாற்றினார். இதில் எஸ்.எஸ். பாலாஜி எம்.எல்.ஏ கண்டன உரையாற்றினார். பேரூராட்சி செயலாளர் ஜி.டி.யுவராஜ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப், ஒன்றிய பெருந்தலைவர் டாக்டர் ஆர்.டி.அரசு, எஸ்.ஏ.பச்சையப்பன், எம்.செல்வகுமார், மோகன் குமார் ஆர்.கே.ரமேஷ் வி. அருள்மணி, வ.கனல்விழி, அ.ந.பெருமாள் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி அளிப்பு சட்டத்தை சிதைத்த கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து அதற்கு துணை போகும் அதிமுகவை கண்டித்தும் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ஆலோசனை படி எல்லாபுரம் வடக்கு தெற்கு ஒன்றிய திமுக சார்பில் பெரியபாளையம் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி, முன்னாள் கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் அரூர் டில்லிபாபு, ஆகியோர் கண்டன உரையாற்றினர். உடன் ஒன்றிய செயலாளர் ஆ.சக்திவேல் , மாநில மாவட்ட நிர்வாகிகள் ஏ.வி.ராமமூர்த்தி, பா. செ.குணசேகரன், ஜி.ஸ்டாலின், உள்பட 100 நாள் வேலை செய்து வரும் பெண்கள் மற்றும் பொதுமக்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட 1200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 309 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,டிச.26-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 309 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (25.12.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 57, தண்ணீர் தொட்டி தெரு, வால்டாக்ஸ் ரோடு.



2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56அ, வள்ளுவர் நகர் பிரகாசம் சாலை பிராட்வே, சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### வை. ம. அருள்தாசன் ஏற்பாடு ! திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# சுனாமி நினைவு தின அஞ்சலி - பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம், கலாநிதிவீராசாமி, கே.பி. சங்கர், எஸ்.மோகன் பங்கேற்பு!

சென்னை,டிச.26-

கடந்த 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமி ஆழிபேரலையில் சிக்கி எண்ணற்ற உயிர்கள் பறிபோனது. அதே நாளில் உயிர்நீர்த்த உறவுகளுக்கு ஆண்டு தோறும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல். ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்பி ஆகியோரின் தலைமையில் சுனாமி ஆழிப்பேரலையில் உயிர் நீர்த்த சொந்தங்களை நினைவு கூறும் தினமான டிசம்பர் 26 அன்று சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட பாரதியார் நகர் கடற்கரையில் அஞ்சலி காலை 11 :00 மணியளவில் செலுத்தப்படுகிறது.

பாரதியார் நகர் சகாய மாதா ஆலயம் அருகில் துவங்கி பிரதான சாலையில் கழக நிர்வாகிகள் பொதுமக்களோடு அமைதிப் பேரணியாக கடற்கரைக்குச் சென்று உயிர் நீர்த்த சொந்தங்களை நினைவு கூறும் வண்ணம் பால் தெளித்து மலர்த்தூவி அஞ்சலி செலுத்தப்படுகிறது.

தொடர்ந்த மீனவ சமுதாய மற்றும் வியாபாரம் செய்யும் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது .

இந் நிகழ்விற்கு சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் அண்ணன் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல். ஏ, மற்றும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம். பி, சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் , எம். எல். ஏ, மாநில வர்த்தகர் அணி துணைத்தலைவரும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் தி. நகர் எஸ். மோகன், மண்டல குழு தலைவர்கள் தி.மு. தனியரசு , ஏ. வி. ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்று அஞ்சலி செலுத்த உள்ளார்கள்.

இந்த நினைவு அஞ்சலி நிகழ்வில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் செயற்குழு உறுப்பினர்கள்

மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA&2 BLA&C, BDA, BYA கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### என் வாக்குச் சாவடி — வெற்றி வாக்குச் சாவடி!

# கலைஞர் நகர் தெற்குப் பகுதியில் தெருமுனைக் கூட்டங்கள்!

## அமைச்சர் மா . சுப்பிரமணியன் பங்கேற்பு! பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிவிப்பு!

சென்னை, டிச.26 -

கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே. கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் தெற்கு பகுதி, 138 அ வட்டத்தில் 234, 259 பாகங்கள், 137ஆ வட்டத்தில் 152 வது பாகம் சார்பில் 26.12.2025 மாலை 5 மணிக்கு பிள்ளையார் கோவில் தெருவில் பாகதலைவர்கள் மணிகண்டன், நாகப்பன், செல்வம் தலைமையில் “என் வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச் சாவடி” தெருமுனை கூட்டம் வட்ட செயலாளர்கள் அ. கதிரேசன், சு. ஜம்புமுருகன் முன்னிலையில் , அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்ரமணியன் சிறப்புரையாற்றுகிறார்.

இதில் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., கணக்கு நிலைகுழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தகரணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், தெற்கு பகுதி செயலாளர் கே.கண்ணன், வடக்கு பகுதி செயலாளர் மு.ராசா, தொகுதி பொறுப்பாளர் வே. உமாகாந்த், கலந்து கொள்கின்றனர்.

மேற்படி கூட்டத்திற்கு அந்தந்த பாக உறுப்பினர்கள், பாகத்துக்குட்பட்ட நிர்வாகிகள், பாகத்துக்குட்பட்ட திமுக கழகத்தினர், கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கலைஞர்நகர் தெற்கு பகுதிச் செயலாளர் கே. கண்ணன் தெரிவித்துள்ளார்.

### மீ.வே.கர்ணாகரன் ஏற்பாட்டில் — துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் — சே.கருணாஸ் — சைதை சாதிக் சிறப்புரை!

சென்னை, டிச.26

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகர்.மாாக்கெட்டில் மாபெரும் பொது கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பள்ளி மாணவிக்கு ஊக்கத்தொகை மற்றும் ஏழை எளிய 1000 மகளிர்களுக்கு (பிரசர் குக்கர்) நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முக்குலத்தோர் புலிப்படை தலைவர் சே.கருணாஸ் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சைதை.சாதிக் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முகம்மது, கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், கே.வீரம்மாள், செ.அரசு. இரா.விஜயன், பா.சேகர். பொன். கோதண்டன் மற்றும் மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

சோ.தெ.ஒ.இ. அமைப்பாளர் எம்.ஜெகன். சோ. தெ. ஒ.மாண. அ.அமைப்பாளர் ஏ.கே.கௌதம் ஆகியோர் நன்றி உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியை சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கருணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி. — கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

# மலேசியாவில் தமிழ் நூல்கள் வெளியீட்டு விழா!

## டாக்டர் டத்தோ. சரவணன் நூல்களை வெளியிடுகிறார்!

கோலாலம்பூர்,டிச.26-

வெளிநாட்டு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் (NRTIA), மலேசியா தமிழர்கள் சங்கம், மற்றும் மாமன்னர் இராசராச சோழன் வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம் பம்பப்படையூர் இணைந்து நடத்தும் தமிழ் நூல்கள் வெளியீட்டு விழா இன்று மாலை 6 மணிக்கு கோலாலம்பூர் நேதாஜி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கழக அயலக அணித் தலைவரும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் சு. கல்யாணசுந்தரம் ஆகியோர் பங்கேற்கின்றனர், இந்நிகழ்வில் மணிகண்டன் அவர்கள் வரவேற்புரை வழங்க, சிங்கப்பூர், தமிழ்நாடு அரசு அயல்நாடு தமிழர் நலவாரிய உறுப்பினர் கோபாலகிருஷ்ணன் வெங்கட்ராமன் முன்னிலையில் மலேசியா பாராளுமன்ற உறுப்பினரும், மக்கள் இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவருமான டாக்டர். டத்தோ. சரவணன், புத்தகத்தை வெளியிடுகிறார்.

மேலும் இந்நிகழ்வில் பேராசிரியர் டாக்டர் டத்தோ. முஹம்மது ஹனிபா, நூலாசிரியர் ஸ்ரீதரன், முஹம்மது பைசல், சிறப்பு அழைப்பாளர்களாக ராஜேந்திரன், நசிருதீன், பன்னீர்செல்வம், கஜ்ஜாலி, செங்குட்டுவன் வீரன், விஜயகுமார், புருசோத்தமன், வீரா, ஆனந்தராஜா, குமாரசாமி, வீரப்பன், காசிம், பரகத் மற்றும் நிகழ்வின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பங்கேற்க ஜெயசீலன் அவர்கள் நன்றியுரை வழங்குகிறார்.

### சென்னையில் 4079 வாக்குச் சாவடிகளிலும்

# டிச.27 - 28 தேதிகளில் சிறப்பு முகாம்!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,டிச.26-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, வரைவு வாக்காளர் பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் 19.12.2025 முதல் 18.01.2026 வரை நடைபெறும்.

ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் காலத்தில், தகுதியுள்ள குடிமக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வசதியாக, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 27.12.2025 (சனிக்கிழமை), 28.12.2025 (ஞாயிற்றுக்கிழமை), 03.01.2026 (சனிக்கிழமை) மற்றும் 04.01.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் காலத்தில், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத குடிமக்கள் மற்றும் 18 வயது நிரம்பிய தகுதியுடைய குடிமக்கள் படிவம்-6ஐ உறுதிமொழி படிவத்துடன் (Declaration Form) சமர்ப்பித்து தங்கள் பெயரை சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

மேலும், ஒரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு வாக்காளரும், முன்மொழியப்பட்ட சேர்க்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள பெயரை நீக்ககோரவோ படிவம்-7 மூலம் விண்ணப்பிக்கலாம்.

முகவரி மாற்றுதல் / ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்ய / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) மாற்றம் செய்ய / மாற்றுத்திறனாளி (PwDs) வாக்காளர்கள் என குறிப்பது ஆகிய கோரிக்கை உடையவர்கள் படிவம்-8 மூலம் விண்ணப்பிக்கலாம்.



கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகரம் அமிர்தபுரம் ஆதிதிராவிடர் பகுதியைச் சார்ந்த ஹரி அஸ்வினி குடும்பத்தினருடன் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கேக் வெட்டி கொண்டாடி புத்தாடைகள் மளிகைப் பொருட்கள் வழங்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்தார்.



இந்திரா கல்வி குழுமம் சார்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா திருவள்ளூர் அடுத்த பாண்டூர் இந்திரா மருத்துவ கல்லூரியில் நடைபெற்றது இதில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கிறிஸ்துமஸ் பரிசு தொகுப்பு பைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இதில் நிர்வாக இயக்குனர் இந்திரா ராஜேந்திரன், ஏஜி சர்ச் நிறுவன தலைவர் ரெவெரெண்ட் டாக்டர் செல்லதுரை, பூரண சுவிசேஷ தேவர் சபை ரெவெரெண்ட் ஏ. தங்கச்சன், தேவசபை தலைவர் ரெவரெண்ட் சாது சுந்தர் சிங் திமுக நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், சி.ஜெயபாரதி, கூளூர் ராஜேந்திரன், மகாலிங்கம், அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், மோதிலால், பிரகாஷ் ஞானஒளி, எஸ்.கே.ஆதாம், ப.சிட்டிபாபு, பொன்.பாண்டியன், தி.அ.கமலகண்ணன், டி.செல்வகுமார், கொப்பூர் திலீப்குமார், பி.சரவணன், ராஜாசீங், பலர் உள்ளனர்